# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு

# 2018

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 8

நேரம்: 180 மணித்துளிகள்

சுட்டெண்: | | | | | | | | |

மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 20 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

1. பாடலாலும் உரைநடையாலும் ஆக்கப்பட்டுள்ள இலக்கியங்களைக் குறிப்பது

அ) இசை ☐ ஆ) நாடகம் ☐
இ) இயல் ☐ ஈ) கூத்து ☐

2. சிங்கம் முழங்கும். அது போல குதிரை

அ) கனைக்கும் ☐ ஆ) ஊளையிடும் ☐
இ) சீறும் ☐ ஈ) உறுமும் ☐

3. ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடிய இறுதித் தமிழ் மன்னன்

அ) கயிலைவன்னியன் ☐ ஆ) பண்டாரவன்னியன் ☐
இ) எல்லாளன் ☐ ஈ) சேனன் ☐

4. ஔவை சிறுவனிடம் ஆய்ந்து தரும்படி கேட்ட பழம்

அ) நாவல் ☐ ஆ) கொய்யா ☐
இ) விளா ☐ ஈ) தோடை ☐

5. காடு + அரண் என்பதைச் சேர்த்து எழுதினால்

அ) காட்டரண் ☐ ஆ) காடுஅரண் ☐
இ) காடரண் ☐ ஈ) காட்டுஅரண் ☐

6. மும்முடிச் சோழமண்டலம் என அழைக்கப்பட்ட நாடு

அ) இந்தியா ☐ ஆ) மலேசியா ☐
இ) இலங்கை ☐ ஈ) பர்மா ☐

7. இலையின் காய்ந்து விட்ட நிலையைக் குறிப்பது

அ) பழுப்பு ☐ ஆ) சருகு ☐

இ) தளிர் ☐ ஈ) கொழுந்து ☐

8. உயிர்மெய்யெழுத்துகள்

அ) 247 ☐ ஆ) 216 ☐

இ) 30 ☐ ஈ) 18 ☐

9. தான் வாழக் கருதாமல், தகடூரான் தந்த கனி

அ) மாங்கனி ☐ ஆ) பலாக்கனி ☐

இ) நெல்லிக்கனி ☐ ஈ) விளாங்கனி ☐

10. "மங்கையராகப் பிறப்பதற்கே - நல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா" எனத் தொடங்கும் பாடலைப் பாடியவர்

அ) மகாகவி து.உருத்திரமூர்த்தி ☐

ஆ) கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை ☐

இ) பாவேந்தர் ☐

ஈ) பாரதியார் ☐

11. நாவரசனது பாட்டி கதை கூறினார். இச்சொல்லியத்தில் வேற்றுமை உருபு ஏற்ற சொல்

அ) கதை ☐ ஆ) பாட்டி ☐

இ) நாவரசனது ☐ ஈ) கூறினார் ☐

12. முத்துராயக் கவிராயர் இயற்றிய நூல்

அ) தேம்பாவணி ☐ ஆ) கைலாயமாலை ☐

இ) சீறாப்புராணம் ☐ ஈ) யாழ்நூல் ☐

13. நாம் ஆண்டுப் பிறப்பன்று ________________ப் போற்றுகின்றோம்.

அ) கதிரவனை ☐ ஆ) திங்களை ☐
இ) வானத்தை ☐ ஈ) மழையை ☐

14. குரங்கின் இளையது குட்டிபோல மீனின் இளையது

அ) குட்டி ☐ ஆ) பிள்ளை ☐
இ) பேத்தை ☐ ஈ) குஞ்சு ☐

15. பண்டாரவன்னியனுடன் தொடர்புடைய ஊர்களில் ஒன்று

அ) மன்னார் ☐ ஆ) யாழ்ப்பாணம் ☐
இ) முள்ளியவளை ☐ ஈ) ஆனையிறவு ☐

16. **குறள் :** புறத்தூய்மை நீரான் அமையும் அகத்தூய்மை
________________ காணப் படும்.

அ) பொய்மையால் ☐ ஆ) வாய்மையால் ☐
இ) இனிமையால் ☐ ஈ) வன்மையால் ☐

17. பார்த்தார் என்ற சொல்லின் இடைநிலை

அ) ஆர் ☐ ஆ) த் ☐
இ) பார் ☐ ஈ) தார் ☐

18. நண்பர்கள் பொங்கல் உண்டனர். இச்சொல்லியத்தில் இடம்பெற்ற ஆகுபெயர்

அ) குணவாகுபெயர் ☐ ஆ) பொருளாகுபெயர் ☐
இ) காலவாகுபெயர் ☐ ஈ) தொழிலாகுபெயர் ☐

19. காளமேகப் புலவரின் இயற்பெயர்

அ) வரதன் ☐ ஆ) கனகசுப்புரத்தினம் ☐
இ) மயில்வாகனன் ☐ ஈ) சேவியர் ☐

20. **வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்** என்ற பழமொழி குறிப்பது

அ) தொடர்பயிற்சி திறனை வளர்க்கும் ☐

ஆ) முயற்சி இன்றி உயர்ச்சி இல்லை ☐

இ) முன் மாதிரியாக இருத்தல் ☐

ஈ) திறமையின் ஆற்றல் ☐

21. விடிவெள்ளி எழும் திசை

அ) வடக்கு ☐ ஆ) தெற்கு ☐

இ) கிழக்கு ☐ ஈ) மேற்கு ☐

22. **பார்** என்ற சொல்லின் பொருள்

அ) உலகம் ☐ ஆ) வானம் ☐

இ) கடல் ☐ ஈ) நெருப்பு ☐

23. தோற்செருப்பு என்பது எவ்வகைப் புணர்ச்சி

அ) தோன்றல் ☐ ஆ) கெடுதல் ☐

இ) திரிதல் ☐ ஈ) இயல்பு ☐

24. மரத்திலிருந்து பழம் விழுந்ததை நான் கண்டேன். இது எவ்வகைச் சொல்லியம்

அ) ஏவற்சொல்லியம் ☐ ஆ) வினாச்சொல்லியம் ☐

இ) கலப்புச் சொல்லியம் ☐ ஈ) தனிச்சொல்லியம் ☐

25. உடலைச் சுட்டெரிக்கும் வெய்யிற் காலம்

அ) இளவேனில் ☐ ஆ) முதுவேனில் ☐

இ) கார் ☐ ஈ) கூதிர் ☐

26. நான்கு பக்கமும் நீரால் சூழப்பட்ட நிலம்

அ) கழிமுகம் ☐ ஆ) குடாநாடு ☐

இ) குடாக்கடல் ☐ ஈ) தீவு ☐

27. விளையாடினான் என்ற சொல்லின் வினையடி

அ) விளையாடி ☐ ஆ) விளையாடிய ☐

இ) விளை ☐ ஈ) விளையாடு ☐

28. ஆந்தை

அ) அலறும் ☐ ஆ) கரையும் ☐

இ) அகவும் ☐ ஈ) பேசும் ☐

29. பாவாணி இனிமையாகப் பாடினாள். இச்சொல்லியத்தில் மறைந்துள்ள சொல்லிய உறுப்பு

அ) எழுவாய் ☐ ஆ) பயனிலை ☐

இ) செயப்படுபொருள் ☐ ஈ) அடைமொழி ☐

30. இயல்புப் புணர்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) நெற்கதிர் ☐ ஆ) பலாப்பழம் ☐

இ) வானொலி ☐ ஈ) வானவில் ☐

புள்ளிகள் 30

## 2) பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுவிடை தருக.

இயற்கையின் அரிய வளங்களான காடுகள் எமக்குப் பல வழிகளிலும் பயன்படுகின்றன. உயிரினங்கள் உயிர்க்கத் தேவையான உயிர்வளி ( $O_2$ ) காட்டு மரங்களிலிருந்து கிடைக்கிறது. காடுகளில் உள்ள அடர்ந்து உயர்ந்த மரங்கள் மழை பொழிய உதவுகின்றன. காட்டு மரங்களின் இலைகள் உதிர்ந்து மண்ணுடன் கலந்து மக்குவதால் மண்வளம் அதிகரிக்கிறது. காடுகளிலுள்ள அடர்ந்த மரங்களின் வேர்கள் மண்ணை இறுகப் பிடித்துக் கொள்வதால் மழைக் காலங்களில் மண் அரிப்புத் தடுக்கப்படுகிறது. காட்டு விலங்குகளின் இயல்பான இருப்பிடங்களாகக் காடுகள் உள்ளன. மக்களுக்குத் தேவையான விறகுகள் மற்றும் மரத்தினால் செய்யப்படும் இற்கலங்கள் என்பனவும் காட்டில் உள்ள மரங்களிலிருந்து கிடைக்கின்றன. அதைவிட எமக்கு அகத்தியமான மருத்துவக் குணமுள்ள விதைகள், இலைகள், வேர்கள், பட்டைகள் என எண்ணற்ற பொருட்களும் கிடைக்கின்றன. காடுகள் உயிரினங்களின் இயற்கைக் காப்பகங்களாக விளங்குகின்றன.

1. காட்டு விலங்குகளின் இயல்பான இருப்பிடங்களாக உள்ளவை எவை?

   ____________________________________

   ____________________________________

2. காடுகளில் உள்ள உயர்ந்த மரங்கள் எதற்கு உதவுகின்றன?

   ____________________________________

   ____________________________________

3. மரங்களின் வேர்கள் மண்ணை இறுகப்பிடித்துக் கொள்வதால் எது தடுக்கப்படுகிறது?

   ____________________________________

   ____________________________________

4. மண்வளம் எவ்வாறு அதிகரிக்கிறது?

   ____________________________________

   ____________________________________

5. உயிரினங்கள் உயிர்க்கத் தேவையான உயிர்வளி எதிலிருந்து கிடைக்கின்றது?

   ____________________________________

   ____________________________________

**புள்ளிகள் 10**

**3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. சைவநெறி இலக்கியங்கள் இரண்டினைத் தருக.

2. காளமேகப் புலவர் எவ்வகைப் பாடல்களைப் பாடுவதில் வல்லவர்?

3. வெள்ளூர்ப் போரிலே பராந்தகசோழனாலே தோற்கடிக்கப்பட்ட பாண்டிய மன்னன் யார்?

4. பொய்யாமை அன்ன புகழில்லை எய்யாமை
   எல்லா அறமும் தரும்
   இக்குறளின் பொருளைத் தருக.

5. பண்டாரவன்னியனது படையணிகளால் கைப்பற்றப்பட்ட கோட்டைகள் எவை?

6. “தூதில் வென்று வருவதற்கு முன்னே இதைத்தின்று சுவைத்திடுக!” இக்கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?

7. முதல் இடைக்கழகங்கள் அமைந்திருந்த நிலங்கள் எதனால் அழிவுற்றன?

புள்ளிகள் 10

**4)** **தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக வைத்து, கவிதையை முழுமையாக்குக.**

# பனித்துளியே !

| கதைகள் | மயக்கம் | நீயும் | கரைந்து | தழுவும் |
|---|---|---|---|---|

வானம் எறிந்த பனித்துளியே - உன்னை

வாரித் ____________________ பசும்புல்லே !

மண்ணைத் தழுவிடும் வெண்பனியே - நெஞ்சில்

____________________ எதுவோ உரைத்திடுவாய் !

கடலில் விழுந்த பனித்துளியே - நீதான்

____________________ நுரையாய் எழுந்தனையோ !

இரவின் மடியில் விளையாடி - பல

இனிய ____________________ வழங்கிவிட்டாய் !

ஒளிரும் ஒளியில் உருகும் முன்னே - மண்ணில்

ஓடி ____________________ மறைந்திடுவாய் !

புள்ளிகள் 10

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. சொல்லிய உறுப்புகள் அனைத்தும் இடம்பெறுமாறு சொல்லியம் எழுதுக.

______________________________________________

______________________________________________

2. உவமை அணிகளின் உவமானம், உவமேயம், பொதுத்தன்மை என்பவற்றைத் தருக.

| உவமை அணிகள் | உவமானம் | உவமேயம் | பொதுத்தன்மை |
|---|---|---|---|
| தேன்மொழி | | | |
| தாமரை முகம் | | | |

3. பின்வரும் சொற்களின் பொருளைத் தருக.

கேண்மை ______________ கொடை ______________

மாட்சி ______________ அல்லல் ______________

வைகறை ______________ விசும்பு ______________

4. ஒவ்வொன்றுக்கும் எடுத்துக்காட்டுத் தருக.

பலர்பால் ______________

வினைமுற்று ______________

இடைச்சொல் ______________

5. பின்வரும் சொற்களுடன் வேற்றுமை உருபுகளைப் புணர்த்தி எழுதுக.

| சொற்கள் | ஐ | ஆல் |
|---|---|---|
| குழலி | | |
| அது | | |
| நான் | | |

புள்ளிகள் 15

## 6) பந்தியை தமிழ்மொழியில் மாற்றி எழுதுக.

*Olympic is a game where all countries of the world participate together. This happens once in four years.There are five rings in Olympic games. These five rings symbolisefive continents. The colours of the rings are red, yellow, blue, green and black. There are winter Olympics and summer Olympics in Olympic games. Prizes will be given to the winners in Olympic games. Games will give unity among countries world wide.*

*Le Olimpiadi sono un evento sportivo/ competizione sportiva in cui partecipano tutti gli stati (paesi) del mondo. Queste si svolgono una volta ogni quattro anni. Il simbolo delle Olimpiadi è rappresentato da cinque cerchi. Questi cinque cerchi rappresentano i cinque continenti del mondo. Il colore dei cerchi sono rosso, giallo, blu, verde e nero. Le Olimpiadi si suddividono in giochi olimpici estivi e giochi olimpici invernali. Gli atleti vincitori di questa competizione ricevono dei premi (medaglie). I giochi olimpici favoriscono l'unione degli stati di tutto il mondo.*

*Olympische Spiele sind Spiele, die von allen Ländern dieser Welt zusammengespielt werden. Diese finden alle vier Jahre statt. Bei den olympischen Spielen gibt es fünf Ringe. Die fünf Ringe stehen für fünf Kontinente. Die Farben dieser Ringe sind rot, gelb, blau, grün und schwarz. Die olympischen Spiele werden als Sommerspiele und Winterspiele in zwei Arten aufgeteilt gespielt. Den Siegern des Spiels werden Preise gegeben. Diese Spiele fördern den Zusammenhalt zwischen den Ländern dieser Welt.*

*Olympiska spelen är ett spel där världen länder enas och spelar. Det hålls vart fjärde år. På de olympiska spelen finns det fem ringar. De fem ringarna representerar fem världsdelar. De ringarnas färger är röd, gul, blå, grön och svart. Inom de olympiska spelen spelas det två varianter av spel som är sommarspel och vinterspel. I de spelen får vinnarna priser. De här spelen bidrar till en förening mellan länder.*

*Olympiske lege (OL) er en internationalt sportsbegivenhed med mange sportsgrene. Denne bliver afholdt hver 4. år. Der er 5 ringe i de olympiske lege. De 5 ringe symboliserer 5 kontinenter. Ringenes farver er rød, gul, blå, grøn og sort. De olympiske lege er opdelt i sommer-OL og vinter-OL. Der bliver overrakt præmier til vinderne i de olympiske lege. Olympiske lege skaber gode sammenhold mellem de forskellige lande.*

*Bij de olympische spelen speelt ieder land mee. Dit gebeurd eens in de vier jaar. De logo heeft vijf cirkels. De cirkels staan voor de vijf werelddelen. De kleuren van de vijf cirkels zijn rood, geel, blauw, groen en zwart. De spelen vinden plaats in de zomer en in de winter. De gene die wint ontvangt een prijs. De olympische spelen brengt iedereen vanuit de hele wereld bij elkaar.*

*Olympiaden er en konkurranse der alle landene i verden deltar sammen. Dette skjer hvert fjerde år.*
*Det er fire ringer i olympiske leker. Fargene på ringene er røde, gule, blå, grønne og sorte. Det er vinterolympiade og sommerolympiade i de olympiske leker. Det vil bli gitt priser til vinnerne i olympiske leker. Disse lekene vil skaper samhold mellom landene over hele verden.*

*Les jeux olympiques sont des jeux où tous les pays du monde y participent. Cela se déroule une fois tous les 4 ans. Il y a 5 anneaux sur le drapeau olympique. Ces 5 anneaux représentent les 5 continents. Les couleurs des anneaux sont rouge, jaune, bleu, vert et noir. Il y a les jeux olympiques d'hiver et les jeux olympiques d'été. Des prix sont donnés aux vainqueurs des jeux olympiques. Les jeux donnent une forme d'unité entre les pays à travers le monde.*

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

**புள்ளிகள் 05**

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

✸ தமிழ் இலக்கிய வளம்

✸ மரங்கள்

- மரங்கள் பற்றி... ( பெயர்கள், சிறப்புகள் )
- மரங்களினால் கிடைக்கும் நன்மைகள்
- மரங்கள் அழிக்கப்படுவதனால் ஏற்படும் தீமைகள்
- மரங்களை அழியாது காக்க என்ன செய்யலாம் ?

✸ காலைக்காட்சி

புள்ளிகள் 20